<u>DEPOSITION OF WITNESS</u>
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : | STC.No.445/2021 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| Name | : | கதிரவன் |
| Father/Husband Name | : | லட்சுமணன் |
| Village | : | சாமிநாதன்தோட்டம் |
| Taluk | : | சங்ககிரி |
| Caste | : | கொங்குவேளாளர் |
| Calling | : | ஜவுளித்தொழில் |
| Religion | : | இந்து |
| Age | : | 39 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 21.04.2022.

<u>21.04.2022 – முதல் விசாரணை :</u>

இவ்வழக்கில் நான் புகார்தாரர் ஆவேன். எனது தரப்பு முதன்மை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விசயங்கள் அனைத்தையும் நானே வழக்கறிஞரிடம் சொல்லி, அதை அவர் கணினி மூலம் பதிவு செய்து, அதனை நான் படித்து பார்த்து நான் சொன்னபடி இருந்ததால், அதில் கையெழுத்து செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை ஏற்று கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன். எதிரி புகார்தாரருக்கு வழங்கிய 28.01.2021 -ம் தேதியிட்ட ரூபாய் மூன்றுலட்சத்துக்கான எச்.டி.எப்.சி வங்கியின் காசோலை எண். 000009 அசல் **வா.சா.ஆ.1** ஆகும். 01.02.2021 -ம் தேதியிட்ட, காசோலை எண். 000009 வங்கியில் செலுத்தியபோது திருப்பப்பட்டதற்கான சிட்டியூனியன் வங்கியின் ரிட்டர்ன் மெமோ **வா.சா.ஆ.2** ஆகும். புகார்தாரரின் வழக்கறிஞர் எதிரிக்கு அனுப்பிய 18.02.2021- ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ.3** ஆகும். புகார்தாரரின் வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகைஅட்டை **வா.சா.ஆ.4** ஆகும். எதிரி மற்றும் அவரது கணவர் உலகநாதன் ஆகியோரின் வழக்கறிஞர் புகார்தாரருக்கு அனுப்பிய 19.02.2021 -ம் தேதியிட்ட சட்டஅறிவிப்பு அலுவலகநகல் **வா.சா.ஆ.5** ஆகும். புகார்தாரரின் வழக்கறிஞர் எதிரியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய 11.03.2021 தேதியிட்ட

பதில் வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ.6** ஆகும். எனவே என் பிரமாண வாக்குமூலத்தை ஏற்று புகாரில் கூறியுள்ளபடி எதிரியை தண்டித்து, எனக்கு இழப்பீடு வழங்க உத்திரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்குவிசாரணை: (எதிரிதரப்புக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை)

Sd/-Kathiravan

Sd/-T.Sundarrajan, 21.04.2022,
Judicial Magistrate No.I, Sankari.